# பத்திரிக்கை செய்தி

திருவள்ளூர் மாவட்டத்தில் பணிரெண்டாம் வகுப்பு மற்றும் பத்தாம் வகுப்பு தேர்வு எழுதிய மாணவ மாணவிகள் மதிப்பெண் குறைவு, தேர்ச்சி பெறாமல் போதல் போன்ற காரணங்களால் மிகுந்த மன உளைச்சலுக்கு ஆளாகி பல மாணவ மாணவிகள் விபரீத முடிவுகளை எடுப்பதால், இதனை தடுக்கும் விதமாக மாணவர்களுக்கும், பெற்றோர்களுக்கும் மன அழுத்தத்திலிருந்து விடுபட கல்வி மற்றும் மன நல ஆலோசகர்களை கொண்டு 24 மணி நேரமும் "104" அரசு மருத்துவ ஆலோசனை சேவை மையம், செயல்பட்டு வருகிறது. சுகாதாரத்துறையின் கீழ் செயல்படும் மருத்துவ ஆலோசனை சேவை மையத்தின் எண் "104" என்ற எண்ணிற்கு தொடர்பு கொண்டு பயன் பெறுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

குழந்தைகளை தேர்வு முடிவுகளால் ஏற்படும் பிரச்சனைகளில் இருந்து பாதுகாக்க "104" அரசு மருத்துவ ஆலோசனை மையத்தினை அணுகி பயன்பெறுமாறு திருவள்ளூர் மாவட்டத்தில் செயல்படும் அனைத்து குழந்தை பராமரிப்பு நிறுவனங்கள் குழந்தை இல்ல காப்பாளர்கள் மற்றும் பள்ளி ஆசிரியர்களுக்கு இதன் மூலம் தெரிவிக்கப்படுகிறது.

மேலும், ஆலோசனை பெறுவதற்கு திருவள்ளூர் மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகு தொலைப்பேசி எண். 044 - 27665595 மற்றும் ஸ்நேகா ஆலோசனை மையம் எண். 044 - 24640050, 044 - 24640060 தொடர்பு கொள்ளவும் அறிவுறுத்தப்படுகிறது.

மாவட்ட ஆட்சியர்
திருவள்ளூர். 2/2